2015 செப்டம்பர் 28]

(ஆ) திருவள்ளூர் மாவட்டம், புன்னம்பாக்கம், கொசஸ்தலை ஆற்றில் அனுமதியின்றி மணல் எடுத்தல்

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், கொசஸ்தலை ஆற்றில், புன்னம்பாக்கம் பகுதியில் மணல் எடுக்கப்படுகிறது. எடுக்க அனுமதிக்கப்பட்ட இடத்தைத் தவிர்த்து, சட்டவிரோதமாக மணல் எடுக்கப்படுகிறது என்று மக்கள் ஆட்சேபித்து மாவட்ட ஆட்சியரிடமும், வட்டாட்சியரிடமும், எல்லோரிடமும் முறையிட்ட பிறகும் நியாயம் கிடைக்கவில்லை. அவர்கள் போராட்டத்தை அறிவிப்பு செய்தபிறகு தடுப்புக் காவல். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, பதில் சொல்கிறார். மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன் அவர்களும், அவருடைய இயக்கத்தைச் சார்ந்தவர்களும் இன்று காலை 9—40 மணிக்குத்தான் இந்த கவன ஈர்ப்பு அறிவிப்பைக் கொண்டு வந்து கொடுத்தார்கள். இருந்தாலும், அதற்குரிய பதிலைப் பெற்றிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், புன்னம்பாக்கம் கிராமத்தில் கொசஸ்தலை ஆற்றில் மணல் குவாரி நடத்த சுற்றுப்புறச் சூழல் துறை அனுமதியுடன் 18—4—2015 முதல் 17—4—2016 முடிய உள்ள காலத்திற்கு அனுமதியளிக்கப்பட்டது. மேற்படி குவாரியை ஆரம்பிப்பதற்கு முன்பாகவே புன்னம்பாக்கம் கிராமத்தைச் சார்ந்த திரு. சம்பத் என்பவர் தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் மேற்படி இடத்தில் குவாரி நடத்த தடையாணை விதிக்க வேண்டுமென்று வழக்கு தொடர்ந்து, அதன் தொடர்ச்சியாக குவாரி நடத்த பசுமைத் தீர்ப்பாயத்தால் தடையாணை விதிக்கப்பட்டது. பசுமைத் தீர்ப்பாயத்தில் பொதுப் பணித் துறையின் சார்பாக மேற்படி குவாரி நடத்தப்படும் புன்னம்பாக்கம் கிராமத்தை ஒட்டியுள்ள ஒரு சிலர், இரவு நேரங்களில் முறைகேடாக மேற்படி இடத்தில் மணல் கடத்துவது கண்டறியப்பட்டு, மேற்படி நபர்கள்மீது காவல் துறையில் புகார் செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட நபர்கள்மீது முதல் தகவல் அறிக்கை

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2015 செப்டம்பர் 28

பதிவு செய்யப்பட்ட விவரங்கள் பசுமைத் தீர்ப்பாயத்தில் எதிர் உறுதி ஆவணம்மூலம் சமர்ப்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மேற்படி இடத்தில் மணல் குவாரி நடத்த ஏற்கெனவே விதிக்கப்பட்ட தடையாணை, பசுமைத் தீர்ப்பாயத்தால் விலக்கிக் கொள்ளப்பட்டது. தற்சமயம் மணல் குவாரி எந்தவிதமான விதிமீறல்களும் இல்லாமல், சட்டப்பூர்வமாக அனுமதி பெற்று நடைபெற்று வருகிறது. இருப்பினும், ஒரு சிலரின் சுய இலாபத்திற்காக, தூண்டுதலின்பேரில் இம்மாதிரியான போராட்டங்களை நடத்தி வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன், அமைச்சர்தான் பதில் சொல்லிவிட்டாரல்லவா, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, அமைச்சர் பதில் சொல்லிவிட்டார். இதற்குமேல் அதில் என்ன இருக்கிறது? (குறுக்கீடு) மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டவிரோதமாக அந்த புன்னம்பாக்கம் கிராமத்தில் (குறுக்கீடு) நான் பேசி முடித்துவிடுகிறேன். நான் பேசிவிடுகிறேன். நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: உட்காருங்கள், நான் பேசி முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது சட்டவிரோதமாக அங்கே மணல் அள்ளப்படுகின்றது என்ற தவறான கருத்தை இங்கே பதிய வைத்தார்கள். அது தவறு. சட்டப்படி அனுமதி வாங்கித்தான் அங்கே மணல் குவாரி நடத்தப்பட்டது. இடையில் பசுமைத் தீர்ப்பாயத்தால் தடை விதிக்கப்பட்டது. அந்தத் தடையும் இப்பொழுது நீக்கப்பட்டு, மணல் குவாரி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. புன்னம்பாக்கம் கிராமத்திலிருக்கின்ற மக்கள், அந்த மணல் குவாரியை நடத்த வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார்கள். ஏனென்று சொன்னால், குவாரி நடத்துவதற்குரிய அனுமதி பெற்ற அளவிற்கு

2015 செப்டம்பர் 28] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

மேலாகவே அங்கே மணல் இருக்கிறது. அங்கே இரவு நேரங்களில் பக்கத்து கிராமங்களில் இருப்பவர்கள் இங்கே வந்து மணலைக் கடத்துகிறார்கள். ஆகவே, நியாயப்படி அரசு மூலமாக குவாரி நடத்தப்பட வேண்டுமென்று அந்த கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்தார்கள். அதனடிப்படையில்தான் அங்கு முறைப்படியான அனுமதி வாங்கி, குவாரி நடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடு)

பிற்பகல் 12–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தான் பதில் சொல்லிவிட்டார்களே? பிறகு என்ன? (குறுக்கீடு) வாய்ப்பு இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உங்களுக்குப் பதில் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) வாய்ப்பு இல்லை. திரு. சவுந்தரராசன், நீங்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்களும் இன்று காலை 9–40 மணிக்குத்தான் கவன ஈர்ப்பு அறிவிப்பைக் கொடுத்தீர்கள். (குறுக்கீடு) முதலில் நான் சொல்வதைக் கேட்டுக் கொள்ளுங்கள். (குறுக்கீடு) நீங்கள் 9–40 மணிக்குத்தான் அறிவிப்புக் கொடுத்தீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் பதில் இருந்தால், நான் தெரிவிக்கச் சொல்கிறேன் என்று உங்களிடம் சொன்னேன். அதன்படி மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் உங்களுக்குப் பதில் சொல்லிவிட்டார்கள். பதில் சொன்னதற்குப்பிறகு, திரும்பவும் நீங்கள் விளக்கமாக விவாதம் நடத்த முடியாது. (குறுக்கீடு) வாய்ப்பு இல்லை. (குறுக்கீடு) ஆதாரம் இல்லாமல் நீங்கள் இதுபோன்று பேசக்கூடாது. நீங்கள் கேட்டதற்கு அமைச்சர் பதில் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) நீங்கள் கேட்டதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தால் அந்த அனுமதி வழங்கப்பட்டு, அதற்குப் பின்னாலே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அதற்கு அனுமதி கொடுத்திருக்கின்றார்கள். முறைப்படி, சட்டப்படி, அங்கே

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2015 செப்டம்பர் 28

குவாரி நடத்துவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அனுமதி கொடுத்திருக்கின்றார். மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன் அவர்கள் சொன்ன கருத்து சரி அல்ல என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன், இப்பொழுது உங்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டுமென்றுதான் இன்று 9–40 மணிக்கு நீங்கள் கொடுத்த அறிவிப்புக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அறிக்கையை வாங்கி, உங்களுக்கு, சபை மூலமாக, உங்களை மரியாதைப்படுத்தும் வகையில்தான் இவ்வளவு தூரம் பதிலை உங்களுக்குச் சொல்லியிருக்கிறார். பதில் சொன்னதற்குப் பின்னர் திரும்பத் திரும்ப நீங்கள் அதன் மீது கேள்வி கேட்டுக் கொண்டேயிருந்தால் உங்களுக்கு வாய்ப்பு இல்லை. (குறுக்கீடு) இப்படியெல்லாம் நீங்கள் செய்ய முடியாது. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் தகவல் கோரல் என்ற முறையில்தான் கேட்டீர்கள். (குறுக்கீடு) வாய்ப்பு இல்லை. (குறுக்கீடு) அதற்குத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலைச் சொல்லிவிட்டார்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)*

(இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—
தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, என்னவென்று சொல்லுங்கள்.*

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைக் கடற்படையினரால் நம்முடைய மீனவர்களுடைய படகுகள் பறிமுதல் செய்யப்பட்டு, விடுவிக்கப்படாத நிலையில், மீனவர்களும் கைது செய்யப்பட்டு வருகின்றார்கள். அவர்களை விடுவிக்கவும், படகுகளை மீட்கவும் அரசு என்ன நடவடிக்கை எடுத்து வருகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.*